பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 10 சனிக்கிழமை (27-10-2001) தொலைபேசி: 3378 ஒலி 320

**இன்று வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதித்தினம்**

# யாழ். நகருக்குள் விடுதலைப்புலிகள் எந்நேரமும் ஊடுருவ முயற்சிக்கலாம்

## படையினர் மத்தியில் அச்சம் தீவிர பாதுகாப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாக்கடல் வழியாகவும் தீவகப் பகுதிகளினூடாகவும் யாழ் நகருக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவலாம் என்ற அச்சம் காரணமாக தீவகப் பிரதேசங்களில் இருந்து யாழ் நகருக்கு வரும் பயணிகள் மீதும், யாழ் நகரில் இருந்து தீவகத்திற்கு செல்லும் பயணிகள் மீதும் கடுமையான சோதனை நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இச்சோதனை நடவடிக்கை யாழ். கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள காங்கேசன்துறை வீதியில் வைத்து மேற்கொள்ளப்படுகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் இறுதி நாளான இன்று அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவகத்தில் இருந்து வரும் பயணிகள் கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கு முன்

(8ம் பக்கம் பார்க்க)

## ரூ. 2500 உடன் வேட்புமனு தாக்கல்செய்ய யாழ். செயலகம் வந்தநபர்

(யாழ்ப்பாணம்)

தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை விறு விறுவென ஒரு அன்பர் செயலக வளவிற்குள் நுழைந்தார். பொலிஸார் அவரைத் தடுத்தனர். எங்கே செல்கிறீர்கள் என வினாத் தொடுத்தனர் அதற்கு அவர் தன்னிடமுள்ள 2500 ரூபாவைக் காட்டி நான் வேட்பு மனுத் தாக்கல் செய்யப் போகிறேன் எனக் கூறினார்.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# மூதூர் இராணுவ காவலரண் மீது புலிகள் நேற்று அதிரடித் தாக்குதல்!

[மட்டக்களப்பு]

திருகோணமலை மூதூர் அரபிக்கல்லூரிக் கருகிலிருக்கும் பொலிஸ், மற்றும்இராணுவக் காவலரண் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்

சுமார் 40 நிமிடம் வரை நீடித்த இத் தாக்குதலில் பொலிஸ் கான்டபிள் ஒருவர் பலியானதுடன் இரு படையினர் காயமடைந் துள்ளனர் காயமடைந்த இருவரும் மூதூர் வைத்திய சாலையில் இருந்து திருகோணமலை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்

மோதல் இடம் பெற்றுக் கொண்டிருந்த சமயம் அரபிக் கல்லூரியில் ஷெல்ஒன்று வீழ்ந்து வெடித்தமையால் உடற்பயிற்சியில் ஈடு பட்டிருந்த முஹமது நஷார் [வயது 23] என்ற மாணவர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இதேவேளை மூதூர்

(08ம் பக்கம் பார்க்க)

**"அந்திரெக்ஸ்" அபாயம்**

## இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகம் மூடப்பட்டது

(கொழும்பு)

ஆட்கொல்லி கிருமியான அந்திரெக்ஸ் தூள்கள் தபால் மூலம் பரபப்படுவதால் இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகம் காலவரையறையின்றி மூடப் பட்டுள்ளதாக பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

பிரான்ஸ் தூதரகத்திற்கு நேற்று வந்த கடிதத்தில் அந்திரெகஸ் தூள்கள் இருந்ததாகவும் இக்கடிதத்தை பிரித்துப் பார்த்த பெண் ஊழியர் ஒருவர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்பிரான்ஸ்வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

(ந-4)

## வவுனியா மாவட்டத்தில்

## அமைச்சர் பதவி பறிப்பு

## வவுனியா மாவட்டத்தில் முக்கிய அரசியல் கட்சிகள் இன்று வேட்புமனு தாக்கல்

(வவுனியா)

பொதுஜன ஐக்கியமுன்ணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஈ பி டி.பி. புளொட் ஆகிய அரசியல்கட்சிகள் இன்று காலை வவுனியாசெயலகத்தில் தத்தம் வேட்புமனுக்களைத்தாக்கல் செய்யவுள்ளனர்.

வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும் இறுதித்தினமான இன்று வவுனியா செயலகத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்குவதற்காக பாதுகாப்புக் கடமையில் பெருமளவுபொலிசார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

புளொட்அமைப்பின் சார்பில்தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலும், ஈ.பி டி.பிசார்பில் சிவன்சிவகுமார்தலைமையிலும் இன்று வேட்புமனுத் தாக்கல்செய்யப்படும்.

## பதவி பறிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி விவகாரமுன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவின் சகோதரரான பாலித திஸநாயக்காவின் மாகாணஅமைச்சர் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

பொதுஜனஐக்கிய முன்னணி அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை அவர் கொண்டுள்ளதாலேயே அவரது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டுள்ளது- [ந-5]

## தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு தேசியப் பட்டியலில் சிவசிதம்பரத்தின் பெயர்

[கொழும்பு]

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் எம்.சிவசிதம்பரம், எஸ். முத்துலிங்கம் அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் செயலர் கலாநிதி என், குமரகுருபரன், ரெலோவின் சார்பில் மொகமட் றெனி அபுயூஅப் ஆகியோரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் நேற்று மாலை

(08ஆம் பக்கம பார்க்க)

## யாழ் மாநகர சபையின் சு,வை. அதிகாரியாகமீண்டும் டாக்டர் தெய்வேந்திரன்

(திருகோணமலை)

யாழ்மாநகரசபையின் சுகாதாரவைத்திய அதிகாரியாகத் தொடர்ந்தும் பணியாற்றுமாறு வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனுக்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜயவர்த்தனா உத்தர விட்டுள்ளார்.

யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் தெய்வேந்திரனை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோதிலும் அதனை ஏற்க அவர் மறுத்ததை அடுத்து அவ்விட

(08 ம் பக்கம் பார்க்க)

# மக்களுக்கு சேவையாற்றவே அதிகாரத்தில் பங்கெடுத்தோம்

### அமைச்சர் டக்ளஸ் வவுனியாவில் உரை

(வவுனியா)

எவருடன் பேசினால் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று நாங்கள் ஆலோசனை கூறிக்கொண்டிருக்கப் போவதில்லை. பதிதோடு பதினொன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் எமது கட்சியை வளர்க்கவும் இல்லை. நாங்கள்அமைச்சுப் பொறுப்பை எடுத்ததன் நோக்கம் ஆடம்பர வாழ்வுக்காக அல்ல. புகழுக்காகவும் அல்ல. பொழுது போக்கிற்காகவும் அல்ல. மாறாக மக்களுக்கான சேவைகளை ஆற்றுவதற்காக அதிகாரத்தில் பங்கெடுப்பதற்காகவே ஆகும்.

இவ்வாறு ஈ.பி டி.பியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் வவுனியா மன்னார் பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்கள் பிரதிநிதிகளை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான வீட

[08ம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கிருஷ்ணன் புஷ்பாகரன் என்பவருடையதே. அ: அட்டை (இல-811631833V) வி. அ. அ: (இல 0905003433) என்பன தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்;

(கி/2788)

## வைத்தியரை நியமிக்க கோரிக்கை

(மானிப்பாய்)

பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலைக்கு முழுநேரமாகக் கடமையாற்றத்தக்க வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இவ் வைத்தியசாலைச் சூழலுக்கு மின்னிணைப்பு வழங்குமாறும் சுற்றிவர மதில் அமைப்பதற்கும் நிலவும் ஊழியர் வெற்றிடத்தைநிரப்புமாறும் கோரிக்கை விடுத்துளளனர்;

(உ-232)

## கலா மாலை

யாழ்ப்பாணம்]

யாழ். பிரதேச கலாசார பேரவையினர் நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப; 4.30 மணியளவில் யாழ்; வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்தவிருந்த கலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்; பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

[உ]

## படைவீரர் படுகாயம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கின்னியடி தீவில் படையினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படைவீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

[உ-4]

### விடுதலைப்போராட்டத்தை பலவீனப்படுத்தாது

# தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளைவெல்வதே எம்இலக்கு

### தம் நிலைப்பாடுகுறித்து செந்தில்வேல் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

'தேசிய ரீதியில் இனப்பிரச்சினை ஏற்படுத்தியுள்ளஒடுக்கு முறைக்கு எதிராக தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக்கூடிய அரசியல் கோரிக்கையை முன் நிறுத்துவதே புதிய ஜனநாயகக்கட்சி தேர்தலில் நிற்பதற்கான அடிப்படைக் காரணமாகும்'

புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளருமான சி; கா; செந்தில்வேல் இவ்வாறுதெரிவித்தார். பொதுச் செயலாளரும் புதிய ஜனநாயகக் கட்சியின் தேர்தல் கால முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றுக்காலை 405, ஸ்ரான்லி வீதியிலுள்ள 'வசந்தம்' புத்தக நிலைய கட்டடத் தொகுதியில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 52 வருட பாராளுமன்ற அனுபவங்களின் ஊடாகபெறப்பட்டஅரசியல் யதார்த்தங்களைப்பார்த்தால், தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக்கொள்ளக் கூடிய ஒரு அரசியல் முன்னெடுப்பை இந்தத்தேர்தலின் ஊடாகவெளிப்படுத்த வேண்டும்;

அந்த அரசியல் முன்னெடுப்பானது இரண்டு பேரினவாதக் கட்சிகளுக்கும் எதிராக அவர்களோடு இணைந்து போகாமல் தனித்துவமாக நின்று தமிழ் தேசிய இனத்தினுடைய வடக்கு- கிழக்கு பாரம்பரியத் தாயகத்தைக் காப்பாற்ற தனித்துவமான செயற்பாட்டில் தமிழ் மக்கள் ஈடுபட வேண்டும்;

தேசிய இன விடுதலைப் போராட்டம் ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; அதைத் தோற்கடிப்பதற்கு இரண்டு பேரினவாத சக்திகளும் யுத்தத்தைப் பயன்படுத்துகின்றன.

எமது நிலைப்பாடு அந்தப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தாது மக்களின் வெகு ஜனப் பங்களிப்பின் மூலம் தமிழ் தேசிய இனத்தின்அடிப்படை உரிமைகளான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சி அமைப்பைப்பெற்றெடுப்பதற்கான ஒரு அரசியல் நடவடிக்கையை எமது கட்சி மேற்கொண்டு வருகிறது;

இதன் மூலம் யுத்த நிறுத்தம்,பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பனஏற்படமுடியும்.

யாழ்.மாவட்ட மக்கள் மத்தியில் பல் வேறுவிதமான நிலைப்பாடுகளும் போக்குகளும் இருந்து வருகின்றன. இவற்றினிடையே ஒரு சரியான அரசியல் மார்க்கத்தை வலியுறுத்துவது மிக முக்கிய கடமையாக இருக்கிறது.

கடந்த காலங்களில்தமிழ்த் தலைவர்கள்நடந்துகொண்ட முறைகளை விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டிய தேவை இத்தருணத்தில் எழுந்துள்ளது;

இந்தத் தமிழ்த்தலைவர்கள் இரண்டு பேரினவாதக் கட்சிகளைச் சார்ந்து பேரம் பேசும் வழிமுறையைப் பின்பற்றி வந்துள்ளார்கள்;

இந்தப் பேரம் பேசலால் மக்கள்எந்த உரிமையையும் பெற்றதில்லை,மாறாக உரிமைகளையும் படிப்படியாக இழந்தே வந்துள்ளார்கள்;

புலிகள் தொடர்பானஎமது நிலைப்பாடு 'புலிகள் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள்'ஜனநாயக நாட்டில் ஏகபிரதிநிதித்துவம் என்ற கருத்தியலுக்கு இடமில்லை. பேச்சு வார்த்தை அவர்களுடனேயே நடத்தப்பட வேண்டும் என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்துகிடையாது' என்றார்.

இச்சந்திப்பில்சட்டத்தரணி சோ;தேவராஜா, கா. கதிர்காமநாதன் உட்பட ஏனைய வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்;

இப்பத்திரிகையாளர் சந்திப்பின் ஆரம்பத்தில் மறைந்த யாழ்ப்பாண பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது;

(உ-77)

### பண்பாட்டு

[7ம் பக்கத் தொடர்ச்சி]

றதோ? இதற்கு கல்வியியலாளர்களே விடை கூற வேண்டும்;

,தமிழ் பேசும்உள்ளங்களே சற்றுச் சிந்தியுங்கள்' எனக் கூவியழைக்கும் 'துசிதா'வின் அழைப்பும் சுவர்ணராஜா நிலக்ஷனின் பேட்டித் தொடரில் கலை ஞானியைப் படம்பிடித்துக்காட்டியஒருகட்டம்

'நான் படித்துப் பட்டம் பெறாததால் என் ஆய்வுகள், சேமிப்புகள், இலங்கையில் அங்கீகரிக்கப்படாதவை ஆகிவிட்டன' உண்மையே தான்.

நவாலியூர் செல்வராஜா ரமேஸ் கேசரி மற்றும் செவ்வந்தி. சங்கமம், தினக்குரல், ஏனைய செய்தித் தொடர்பு சாதனங்களும் கலைஞானியின் கருவூலங்களுக்கு உரிய கௌரவமளித்து அவருடைய தாகத்தை வெளிக்காட்டியுள்ளன.

ஷாந்தன் சத்தியகீர்த்தியின் இந்தப் படைப்பானது கலைஞானிக்கு ஒரு ஆறுதலையும் தேறுதலையும், இந்த நாட்டிலே ஒரு மனிதனாவது இருக்கின்றான் என்றநம்பிக்கையும் அளித்திருக்கும்என்பதில் யார் முரண்படுவர்?

'தேசியக் கலைஞனாக, ஆயிரம் பிறைகண்டு நீடு வாழ எனது பிரார்த்தனைகள்'

### யாழ் மாவட்டத்தில்

## ஐ. தே. க. போட்டியிடும் நேற்று வேட்புமனு தாக்கல்

(யாழ்ப்பாணம்)


எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சிசார்பாக போட்டியிடவுள்ள பன்னிருவரும் நேற்று பி.ப; 2;30 மணிக்கு தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்;

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி; மகேஸ்வரன் (முதன்மை வேட்பாளர்) போ; சிவபாதம், இ. அருணாச்சலம், பி;செல்வராசா, மு; சிவபாலன், ந; ஜெயசூரியர், வ; தில்லைநாயகம் போல், த. ராஜரட்ணம், செ. குணரட்ணராஜா, கோ; ஜீவேந்திரா, சி. கணபதிப்பிள்ளை, மு.கனகசுந்தரம் ஆகியோரே வேட்புமனுக்களைத் தாக்கல்செய்துள்ளனர்.

இதேவேளை,யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிடுவதில்லை எனகட்சியின் மத்தியகுழு கூடி முடிவெடுத்திருப்பதாக முன்னர் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே;

(உ-43)

## பதில் நீதவானாக நியமனம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமுகாமைத்துவபீட சட்ட விரிவுரையாளராகிய பொன்: பூலோகசிங்கம் ஊர்காவற்றுறை நீதி நிர்வாக வலயத்திற்கு, சமாதான நீதிபதியாகவும் பதில் நீதவானாகவும் கௌரவ நீதியமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற இவர்அதே பல்கலைக் கழகத்தில் சட்டமாணிப் பட்டமும் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணிகளுக்கான பயிற்சி நெறியில் பயின்றும் சித்திபெற்றுள்ளார்

இலங்கை உயர்நீதி மன்ற சட்டத்தரணியாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல நீதிமன்றங்களில் பணியாற்றிவரும் இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவரர்.

(உ)


யாழ். கல்வியியற் கல்லூரிக்கு

## எமது பாராட்டுக்கள்

இலங்கை தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையே இடம் பெற்ற போட்டியில்

"பொய்யாய் பழங்கதையாய்"

என்ற நாடகத்துக்கு முதற் பரிசு பெற்றமைக்கும் நாடகப் பிரதிக்கான முதற் பரிசையும், அதிற் பங்கேற்றி சிறந்த நடிகர்களாகவும், பின்னணிப் பாடகியாகவும், நாட்டியக் கலைஞராகவும், இசைக் கலைஞர்களாகவும் பரிசுகள் பெற்றமைக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்துகிறோம்;

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்
கட்டைவேலி - நெல்லியடி
ப; நோ; கூ; சங்கம்.

26.10.2001

(C/2789)



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பொருளாளர்
திரு. M. பிரான்சிஸ் அவர்களின்
அன்புத் தாயார்
முடியப்பு திரேசம்மா

26-ஆம் திகதி காலமானார். இவரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். உதைபந்தாட்ட
மத்தியஸ்தர் சங்கம்

NO 61, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்;

(3898)



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை

## நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

2001

**காலம்:** 2001.10.28 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

**இடம்:** ஒறேற்றர் மண்டபம்

**தலைவர்:** திரு. க. சிவாஜி, அதிபர்

**ஆசியுரை:** அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,
J. P. அவர்கள்

**பிரதம விருந்தினர்:** 'ஸ்கந்தவரோதயன்' பேராசிரியர்
க. கந்தசாமி அவர்கள்
B Sc (Hons) Ph. D.
யாழ்; பல்கலைக்கழக பௌதிகத்துறைத் தலைவர்

**நிறுவுநர் நினைவுப் பேருரை**
'ஸ்கந்தவரோதயன் வைத்திய' கலாநிதி
ஜெ. மகாதேவன் அவர்கள்
(யாழ். போதனா வைத்தியசாலை)

**பரிசில் வழங்கல்**
திருமதி சியாமளா கந்தசாமி அவர்கள்
(ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**நிறைவுரை;** திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் (ஆசிரியர்)

விழாவிற்குச் சமுகமளித்துச் சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

[C/2790]

# செய்தித் துளிகள்

## மிதிவெடி விழிப்பு கருத்தரங்கு

(ஆனைக்கோட்டை)

மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைசண்டிலிப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வலிகாமம் தென்மேற்குப் பாடசாலைகளில் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர் [உ-201]

## செயன்முறை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2001ம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான சங்கீதம், நடனம் மற்றும்மனையியல் பாடங்களுக்குரியசெயன்முறைப்பரீட்சை, எதிர்வரும்29 ஆம் திகதிமுதல் அடுத்தமாதம் 5ம்திகதி வரை நடைபெறுமென்று, வலிகாமம்வலயக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இப் பாடநெறிக்கு தோற்றும் வலிகாமப் பாடசாலை மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் வலிகாம வலய அலுவலகத்தில் உள்ளன.

இவற்றை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்கேட்டுள்ளார்.

இதேவேளை2001ம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்களின் குடும்ப வருமானத்தை உறுதிப்படுத்தும்பத்திரங்கள்,மற்றும்2002ம்ஆண்டுக.பொ த. உயர்தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்குரியவிண்ணப்பப் படிவங்கள் என்பனவும்வலயக்கல்விஅலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-04)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அருட்கவி அளவையூர் சி. வினாசித்தம்பி இன்று இணுவில் மஞ்சத்தடி அருள்மிகு அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் கோவில் பரிபாலனசபையினரால்'கவியோகி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

பி. ப. 3 00 மணிக்கு மேற்படி தேவஸ்தான மண்டபத்தில் கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்பாராட்டுரைகளை கலாநிதி சபா.ஜெயராசா, கவிஞர் சோ. பத்மநாதன், சிவததமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம், பேராசிரியர் தேவராசா, கெ. தவராசா, கோ. சந்திரசேகரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ-4)

## சேமலாபநிதி கொடுப்பனவு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

லங்கா உப்புக்கொம்பனி நாட்சம்பள ஊழியர்களின் ஊழியர் சேமலாபநிதிக் கொடுப்பனவுகள் சம்பந்தமானநடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு வசதியாகசகல நாட் சம்பள ஊழியர்களையும்நாளைஞாயிற்றுக்கிழமை நெல்லியடிச் சந்திக்கு அருகாமையிலுள்ள கிறிஸ்தவப் பாடசாலைக்குசமுகமளிக்கும்படி தலைவர் க.வேலுப்பிள்ளை அறிவித்துள்ளார். (உ)

## ஆசிரியமணி பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய முன்னாள் அதிபர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களுக்கான பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ்வித்தியாலய பொன்னுத்துரை அரங்கில் அதிபர் சு. யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்குவார். தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப கோபாலகிருஷ்ண ஐயர் நிகழ்த்துவார். (இ-4)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சேவை தமிழ் ஆங்கில சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் சங்கம் என்னும் பெயரில் பதிவு பெற்ற சங்கத்தை, மத்திய மாகாண அரச சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் சங்கம் என மாற்றியமைப்பது தொடர்பான விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப 9 00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## அமைச்சருடன் சந்திப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றம் இன்று மு.ப 10.00மணிக்கு வடக்கின் அபிவிருத்திபுனர்வாழ்வுபுனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து அபிவிருத்தி பற்றிக் கலந்துரையாடவுள்ளனர்.

மன்றத்தின் தலைவர் என்கந்தையா தலைமையில்சுமார் 150பேர் இக் கலந்துரையாடலில் பங்குகொள்ளவுள்ளனர். (உ-77)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ் வரிசனசமூக நிலையமும் ஸ்ரீ வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகமும் இணைந்துநடத்தும் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமைபி.ப.1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க மணிபல்லவராஜன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்கிறார். (செ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்படவட்டமும் இணைந்துவழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில்MARIO CAMUS இயக்கிய FEDERICO GARCIA LORCAவின் ஸ்பானிஷ் மொழி நாடகமான THE HOUSE OF BERNARDA ALBA இன் (LA CASADE BERNARDA ALBA) இன் திரைப்பட வடிவம் இன்று மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறையண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள்எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள அலகின் இணைப்பாளர் பேராசிரியர், இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

# யாழ் பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை

# தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(வல்வெட்டித்துறை)

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் சித்திரமும் வடிவமைப்பும்கற்கைநெறிக்கு 2001 ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு,

எம். ஜே. மார்க் ஜோசெப், கே.சோபியாலினி, ஆர். அமரகுமார், யு கஜேந்திரன், எஸ். ரட்ணகுமார்.

எம். தர்சினி, கே. நிஷாந்தன், எஸ். ரஜனிகாந், ஆர். பாலமுரளி, ஜி. ஞானசொரூபன், எஸ் ஜெயக்குமார். கே.ஜெகன், பி ஜெபராஜசிங்கம், எஸ் ஜெயவாணி, எஸ். ஜெயகுமரன்.

ஆர். யாழினி, எஸ். ஜனாணன், பி. கோகுலன், ஜி குமாரதாஸன் எஸ் மீரா, வி நிரஞ்சன், எஸ் நவநீசன் ஜி. ஒலிவற்தாரணி.

சி.பதீஸ்ராஜா. பி. பிறேமரஞ்சனா, ஆர். பிரகாஷ் ரி ரதிவதனி, எஸ். ராகுலராஜ், எஸ். ரகுராகவன், ஆர். ரனேசன், ரி. ரமேஸ்

பி. சுசி, ரி சுரேஸ்குமார், எஸ் செந்தூரன், பி. சர்மிலன்.

எஸ். சாந்தினி, எஸ். சாருபா, ஏ. சசிதரகுமாரி, என். சாந்தினி, எஸ். சுகந்திரன், ஆர். தர்மேந்திரா.

ரி. துளசிகரன், ஜே தேவநந்த், ஏ. உதயரூமார், ஏ. விகுந்நன், கே. நித்தியாஞ்சலி, ஏ. சுதர்சன், ஆர். ரதீஸ்வரன்,

கே. கோபி, ரி. சுதாஸ்குமார், பி நிஷாந்தன், எம். கோபிஷ்கஷணா.

இவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ- 217)

## இராசி பலன்

27 10-2001

ஐப்பசி 10, சனி

ஏகாதசி பி. இ. 5.31 வரை

சதயம் பி. இ. 12.53 வரை

இராகுகாலம் 9 03-10.33

சுபநேரம் 3 03-4.33

ஏகாதசி விரதம்

**மேடம்**

தொழில்சிந்தை, கீர்த்தி, குடும்பசுகம், முயற்சிகைகூடும்.

**இடபம்**

சுபநிகழ்வு, தொழில் வெற்றி, கடினஉழைப்பு, காரிய அனுகூலம்.

**மிதுனம்**

உடல்உழைப்பு, பிரயாணம், கட்டுப்பாடு, மனச் சஞ்சலம்.

**கடகம்**

பிரயாணபயம், போசன சுகம், உடல்நலக்குறைவு, வீண்தொல்லை,

**சிங்கம்**

சென்றஇடத்தில் செல்வாக்கு,திடீர்பயணம், காரிய நன்மை, களஸ்திரசுகம்.

**கன்னி**

ஆரோக்கியம், முயற்சி விருத்தி, மனமகிழ்ச்சி, பொருள்சேர்க்கை.

**துலாம்**

தாழ்வுநிலை, வியாபார சிறப்பு, காரியஇடைஞ்சல், உறவினர் சந்திப்பு.

**விருச்சிகம்**

தனனம்பிக்கை குறைவு, காரிய தாமதம், உடல் சோர்வு, சகோதரர் உதவி,

**தனுசு**

அந்நியர் சந்திப்பு, கூட்டு முயற்சி, தனவரவு, காரிய அனுகூலம்,

**மகரம்**

தர்மம், முயற்சிதாமதம், உறவினர் மனஸ்தாபம், பொருள்விரயம்,

**கும்பம்**

ஜனவசியம், போசனசுகம்; நல்லமுயற்சி, கற்பனை மிகுதி.

**மீனம்**

பெரியோர் மனஸ்தாபம், உணர்ச்சி வசப்படல்,காரிய தாமதம், நல்லசெலவு,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## டிஜிற்றல் முறை செய்மதி தொலைக்காட்சி சேவை இலங்கையில் ஆரம்பம்

(கொழும்பு)

உலகின் எல்லா நாடுகளிலுமுள்ளவர்களும் பார்க்கக் கூடியதான டிஜிற்றல் முறை செய்மதித் தொலைக்காட்சிச் சேவை இலங்கையிலும் இடம் பெறவுள்ளது.

இதன்மூலம், தென்னாசியப் பிராந்தியத்தில், டிஜிற்றல் முறை செய்மதித் தொலைக்காட்சிச் சேவையை நடத்தும் முதலாவது தென்னாசிய நாடாக இலங்கை விளங்கவுள்ளது,

நாள் முழுவதுமான மேற்படி சேவையை ரீ.வி. லங்கா என்ற நிறுவனம் வழங்கவுள்ளது.

இதன் பரீட்சார்த்த ஒலிபரப்பு தற்போது இடம் பெற்று வருகின்றது. (உ)

## ஜனநாயக இடதுசாரி முன்னணி யா. மாவட்டத்தில் நேற்று வேட்பு மனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஜனநாயக இடதுசாரி முன்னணிசார்பில் மணிக்கூட்டு சின்னத்தில் 12 பேர் போட்டியிடவுள்ளனர்.

யாழ் செயலகத்தில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

யாழ். மாவட்டத்தில் மேற்படி கட்சிசார்பாக போட்டியிடவுள்ள வேட்பாளர் விபரம் வருமாறு;

காசிப்பிள்ளை செந்திவேல் (முதன்மை வேட்பாளர்) சோமசுந்தரம் தேவராஜா (சட்டத்தரணி), காத்திகேசு கதிர்காமநாதன், சிதம்பரம் மோகன், வீரசிங்கம ரகுநாதன், ஆனந்த குமாரசாமி கந்தப்பு, முத்தையா தியாகராசா, கார்த்திகேசு பஞ்சரத்தனம் (பஞ்சலிங்கம்), கந்தையா வேலும் மயிலும், சந்திரா நவரத்தினம், திரவியம் ராம்குமார், கார்த்திகேசு கணபதிப்பிள்ளை.

சி. மோகன், வீ. ரகுநாதன் ஆகியோர் ஜனநாயக இடதுசாரி முன்னணியையும் ஏனையோர் புதிய ஜனநாயகக் கட்சியையும் சேர்ந்தவர்கள் என்பதும் யாழ். மாவட்டத்தில் புதிய ஜனநாயகக்கட்சி தலைமையில் ஜனநாயக இடதுசாரி முன்னணி போட்டியிடுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-106,77,43)

## பட்டப்பகலில் திருட முயன்ற பாடசாலை மாணவர் பொலிஸார் வசம்

[அளவெட்டி]

சிறுவர்களால் பட்டப்பகலில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சிகடை உரிமையாளரால் முறியடிக்கப்பட்டுளளது.

இச்சம்பவம் கொக்குவில் பகுதியில் உள்ள அழகுசாதனக் கடையொன்றில நேற்று முன்தினம். இடமபெற்றுள்ளது.

இதுபற்றிமேலும்தெரியவருவதாவது: மேறபடி கடைக்கு வந்தமூன்றுசிறுவர்கள் பாடசாலைப்பை ஒன்றினை தாம் வாங்கப்போவதாக கூறி அதனைக்காட்டும் படி கடை உரிமையாளரைக் கேட்டபோது அவர் அதனைஎடுக்கச் சென்ற சமயம் கடையிலிருந்த சுமார் 25க்கு மேற்பட்ட மணிக்கூடுகளை இவர்கள் திருடிக் கொண்டு ஓட முற்பட்ட வேளை கடை உரிமையாளரால்மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர்மூன்று மணிக்கூடுகளுடன் தப்பியோடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிடிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

12வயது நிரம்பிய இச் சிறுவர்கள் வசாவிளான் பகுதியிலுள்ள பாடசாலைமாணவர்கள் எனவும் ஊரெழுவிலுள்ள தனியார் கல்விநிலையத்தில கல்வி கற்பவர்கள் எனவும் விசாரணைகள்மூலம் தெரிய வந்துள்ளதாக யாழ். நிலைய பொலிசார் தெரிவித்துள்ளனர். [உ-4,237]

## சுக வாழ்வு

பாலியல் நோய்கள் பரவுவதற்கான சந்தர்ப்பங்கள்; இது பற்றியதுமான அறிவின்மை.

(எயிட்ஸ்-வருமுன் காப்போம்)

—தரிசனம்

### ஐக்கியதேசியக் கட்சியுடன்

# தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக்கு

# எவ்வித உடன்படிக்கையும் கிடையாது

## முற்றாக மறுக்கிறார் சங்கரி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக்கட்சிக்கோ தமிழர் விடுதலைக் கூட்டணிக்கோ கூட்டமைப்புக் கட்சிகளில் ஏதாவது ஒன்றுக்கோ எதுவிதபுரிந்துணர்வு உடன்படிக்கையும் இல்லை என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களில்ஒருவரான வி. ஆனந்தசங்கரி திட்டவட்டமாக மறுத்துள்ளார்;

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாகவே யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்துள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட செய்தி தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளக்கிவெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் இது அரசின் திட்டமிட்ட விஷமப்பிரசாரமாகும் அரச ஊடகங்களைப் பயன்படுத்தி அரசு செய்யும்பொய்ப் பிரசாரத்தை தமிழ் மக்கள் நம்பி ஏமாறாது விழிப்புடன் இருக்க வேண்டும்.

தேர்தலின்பின், யுத்தத்தையும் வன்னி மீதான பொருளாதாரத்தடையையும் நீக்கி நோர்வே அரசின் அனுசரணையுடன் விடுதலைப்புலிகளுடன் பேச எவர் விசுவாசமாக முன்வருகின்றார்களோ அவர்களுக்கே எமது முழு ஆதரவையும் வழங்குவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது; (உ)

## பவளவிழா ஞாபகார்த்த முத்திரை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தின்பவளவிழா ஞாபகார்த்தமாக 3 50 ரூபா பெறுமதியில் ஒருபுதிய அஞ்சல் முத்திரையை அஞ்சல்திணைக்களத்தின் முத்திரைப் பணியகம் இம்மாதம் 19 ஆம் திகதி வெளியிட்டது.

இதன் தொடராக நேற்றைய தினம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இம் முத்திரை வெளியீடு என். வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்றது,

பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானசுந்தரம் முத்திரையை வெளியிட்டு வைத்தார்;

இந் நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொண்டார்.

இந்நிகழ்வு நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியிலும் இடம்பெற்றது; (உ)

## வாய்க்கால் துப்பரவு

யாழ்ப்பாண நகரவீதிகளின் அருகே உள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்கால்கள்மண் தூர்வாரப்பட்டு வருகின்றது மழைகாலம் நெருங்குவதனால் கழிவுநீர் வெளியேறக் கூடிய வகையிலேயேஇந்நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது; (செ-2)

## யாழ். நகரில் தீவிரசோதனை

(கொழும்புத்துறை)

யாழ். நகரில் கடந்த சில தினங்களாக படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன,

திடீர்திடீரென சந்திகளிலும், ஒழுங்கைகளிலும் வரும் படையினர் தீவிர உடற் பரிசோதனை, அடையாள அட்டைப் பரிசோதனை என்பவற்றில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அண்மையில் இராசாவின் தோட்டச் சந்தி, வைமன் வீதி, கச்சேரி நல்லூர்வீதி, அத்தியடி, கச்சேரி கிழக்குஒழுங்கை முதலிய இடங்களில் இத்தகைய சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது; (எ-223)

## இணையத்தள செய்முறை விளக்கம்

(மானிப்பாய்)

பிரான்பற்று கலைமகள் வித்தியாலய தரம் 8 மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கணனிப் பகுதிக்குச் சென்றிருந்த வேளை அங்கு கணனி சம்பந்தமான விளக்கமும் அத்துடன் ஈ மெயில், இணையத்தள செயற்பாடுகள் பற்றி கணனியின் உதவியுடன் செய்முறை விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது; [உ-232]

## சுன்னாகம் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியிலுள்ள இரண்டு கோவில்களிலும், கடை ஒன்றிலும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள், பணம், பொருட்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றுள்ளது.

மயிலணி வடக்கு அன்னமகேஸ்வரர் ஆலயத்தில் தங்கச் சங்கிலி. பதக்கம், தாலி, வெள்ளிக்கிரீடம், பொட்டு 40 ஆயிரம் ரூபா பணம் ஆகியனவும் அயலூரான மல்லாகம் கோடைக்காடு சாளம்பை முருகன் ஆலயத்தில் இரண்டு உண்டியல்களும்;

மயிலணி அன்னமகேஸ்வரர் ஆலயத்திற்கு முன் அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றில் 10 ஆயிரம்ரூபா பெறுமதியான பொருட்களும் திருடப்பட்டுள்ளன. இத்திருட்டுச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது; (செ-207)

### சமூக அபிவிருத்தி மன்றத்தின்

# 31 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா கடனுதவியால் 472 பேர் பயன்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றம் கிராமிய மக்களுக்கு சுயமுயற்சிக் கடனாக இதுவரை 31 லட்சத்து 65 ஆயிரம்ரூபாவை 472பேருக்கு வழங்கியுள்ளதாக மன்றத்தின் செயலாளர் எஸ். சுவாம்பிள்ளை தெரிவித்தார்;

இக்கடன் பணத்தைப் பயன்படுத்தி விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம் போன்ற சுயமுயற்சியில் பயனாளிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

கடன் பெற்றவர்களில் எண்பது சதவீதத்தினர்பெண்கள்எனவும், கடன் பணம் திரும்பச் செலுத்தும் வீதம் திருப்திகரமானதாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்;

மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்பட்ட 49 அபிவிருத்திக் கழகங்கள் ஊடாகவே இக்கடன் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது, (உ-77)

## உபதபால் அதிபர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு

உபதபாலதிபர்களாகக் கடமையாற்றி 78 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 1994 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதிற்கு இடைப்பட்ட காலத்தில் ஒய்வுபெற்று ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படாத உபதபாலதிபர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு வருவதாக தமிழ் உபதபாலதிபர்கள் சங்கத் தலைவர் ஜோர்ஜ் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இழப்பீடாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் இதுவரை இழப்பீட்டைப் பெறாதவர்கள் அவ்வப்பகுதி பிரதி அஞ்சல்மா அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார், (உ-5)

### குடாநாட்டிற்கான

## 200 தபால் பொதிகள் திருமலையில் தேக்கம்

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலின் குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 310 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன;

அதேசமயம். குடாநாட்டில் இருந்து வெளியூர்தபால்கள் அடங்கிய 42பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன-

மேலும், 200 இற்கும் மேற்பட்ட தபால் பொதிகள் திருமலை தபாலகத்தில் உள்ளதாகவும் அவை கப்பலில் ஏற்பட்ட இட நெருக்கடி காரணமாக இங்கு எடுத்து வரப்படவில்லை எனவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன; [உ-10,106]

### நிரந்தர போதனாசிரியர் ஆட்சேர்ப்பு

# எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

தொழிலநுட்பக் கல்லூரிகளில் நிரந்தர போதனாசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்துப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள போதிலும் யாழ். மாவட்டத்தில் இருந்து இப்பதவிக்கு விண்ணப்பித்த எவருக்கும் எழுத்துப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது;

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் தபால் சேவையில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாகவே அனுமதி அட்டைகள்கைவந்து சேரவில்லை என தெரியவந்துள்ளது.

இதேவேளை, மேற்படி பரீட்சார்த்திகள் பாதிக்கப்படாதவகையில், அவர்கள் அவசரமாக கொழும்பு செல்வதற்கான ஒழுங்குகளை தொழில் நுடபக்கல்லூரிகளின் பணிப்பாளரின் அனுமதிபெற்று மேற்கொண்டு வருவதாகவும்,

அனுமதி அட்டைகளை கொழும்பு திணைக்களத்தில் இன்று மாலை 7 மணிவரையுமோ அன்றி பரீட்சை மண்டபத்திலோபெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் பிராந்தியப் பணிப்பாளர் நாகபோகராஜன் தெரிவித்துள்ளார்.

மேற்படிபரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 50 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# இலங்கையில் எண்ணெய் உற்பத்தி மூன்று வருடங்களில் சாத்தியமாகும்

### கனியவள அபிவிருத்தி அமைச்சர்தெரிவிப்பு

இலங்கையின் தென்பகுதியில் உள்ள ஆழமான கடற்பரப்பில் எண்ணெய் வளம் இருப்பதாகவும் கடலில் இருந்து எண்ணெய் வளம் பெறுவதற்குத் தற்போது சுவீடன், நோர்வேபோன்ற நாடுகளின் உதவிபெறப்படுவதாகவும் கனியவள அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இன்னும் மூன்று வருடங்களுக்குள் கடற்பிராந்தியங்களில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் எனவும், கடல் எல்லை உரிமை தொடர்பாக தற்போது ஐ நா.வுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது.

எண்ணெய்வளத்தைக் கண்டுபிடித்ததினால் இன்று செல்வந்த நாடாகத் திகழும் சுவீடன் நாட்டின் தொழில் நுட்ப உதவிகளைப் பயன்படுத்தி எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ள விருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்; (உ-2)

வெளிவருகிறது

அடுத்த மாதம் 10ந் திகதி நடைபெறவுள்ள கூட்டுறவுப் பரிசோதகர் போட்டிப் பரீட்சை மற்றும் அரசாங்கப் போட்டிப் பரீட்சைக்குரிய

வினா விடைத் தொகுப்பு

நாளை (28. 10. 2001) யாழ்ப்பாணம்

பூபாலசிங்கம் புத்தக சாலையில்

பெற்றுக் கொள்ளலாம்.

(C/2787)

## இன்று ஒரு தகவல்

# கதை அளப்புப் போட்டி

ஓர் ஊரில் முனியன், மாடசாமி என்ற இரண்டு நண்பர்கள் இருந்தனர். இருவருமே கதை அளப்பதில் வல்லவர்களாக இருந்தனர். வேலை தேடுவதற்காகப் பிரிந்த அவர்கள் சில ஆண்டுகளுக்குப் பின் சந்தித்துக் கொண்டார்கள். ''உன்னைப் பார்த்தால் கவலையாக இருப்பதுபோலத் தோன்றுகிறதே! என்ன கவலை?'' என்று கேட்டான் முனியன். அதற்கு மாடசாமி ''என் காது மிகக் கூர்மையானது ஆயிரங் கல் தூரத்தில் இருந்துவரும் சிறு ஓசைகூட என் காதிலிருந்து தப்ப முடியாது.

இங்கிருந்து பலகல் தூரத்தில் ஒரு துறவியின் குடில் உள்ளது தியானத்தில் இருந்த அவர் எப்பொழுதும் ''ஓம் ஓம்'' என்று சொல்லிக் கொண்டே இருந்தார். அந்த ஓசை என்னால் தாங்க முடியவில்லை. என் அமைதியே குலைந்தது. கோபம்கொண்ட நான் பக்கத்திலிருந்த பெரிய மலையைத் தூக்கினேன். பல கல் தொலைவிலிருந்த துறவியை நோக்கி அதை வீசினேன். அந்த மலையும் துறவியைத் தாக்க வேகமாகச் சென்றது. திடீரென்று கண் விழித்த அவர் ''என்ன புழுதி பறக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே தன் கைகளை முகத்துக்கு நேராக அசைத்தார். உடனே அந்தமலை தூள் தூளாகி அவர் முன் கொட்டியது.

என்வலிமை அவரிடம் செல்லவில்லை என்பதை நினைத்தேன். என்னால் எரிச்சல் தாங்க முடியவில்லை'' என்று கதையளந்தான். ''உன்னைப் பார்த்தால் நீயும் எதையோ பறிகொடுத்தவன் போல் இருக்கிறாய். நான் எரிச்சல்படக் காரணம் உள்ளது. உனக்கு என்ன குறை''? என்று கேட்டான் அவன்.

'நேற்று என் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்தார். சமைப்பதற்கு ஒரு பொருளும் இல்லை. என்ன செய்வது என்று சிந்தித்தேன். அப்பொழுது என் அருகே பறந்து கொண்டிருந்த கொசு ஒன்றைப் பிடித்தேன். அதை அறுத்து அதன் ஈரலை எடுத்தேன். அதை இருநூறு துண்டுகளாக வெட்டினேன் பிறகு அந்த ஈரலை நன்றாகச் சமைத்தேன், வந்த விருந்தினரும் அதை விரும்பிச் சாப்பிட்டார், திடீரென்று ஈரல் துண்டு ஒன்று அவர் தொண்டையில் சிக்கிக் கொண்டது, துடிதுடித்து விட்டார் அவர். எப்படியோ அரும் பாடுபட்டு அதை வெளியே எடுத்தோம். என்னைப் பார்த்து அவர் 'எதற்காக அவ்வளவு பெரிய ஈரல் துண்டைப் போட்டாய்? சிறியதாக வெட்டியிருக்கக் கூடாதா?' என்று கேட்டார். அதனால்தான் எரிச்சலுடன் இருக்கிறேன் என்று பதில் சொன்னான் முனியன்.

'' நீ சொல்வதை என்னால் நம்ப முடியாது, கொசுவின் ஈரலை இருநூறு துண்டாக்க யாராலும் முடியாது. அதில் ஒரு துண்டு சிக்கிக் கொள்ளும் அளவிற்கு யாருக்கும் அவ்வளவு மெல்லிய தொண்டை இருக்கமுடியாது.' என்றான் மாடசாமி ''உனக்கு நுண்மையான காதுகள் உள்ளன. ஆயிரம் கல் தொலைவிலிருந்து எழும் சிறு ஓசையையும் உன்னால் கேட்க முடியும். அதை நான் நம்புகிறேன். கொசு ஈரலில் ஒரு துண்டு தொண்டையில் சிக்கிக் கொண்டது என்கிறேன். அவ்வளவு மெல்லிய தொண்டை இருக்கமுடியாது என்கிறாய். அப்படிப்பட்ட நுண்மையான காது இருக்கும் போது இப்படிப்பட்ட மெல்லிய தொண்டை எப்படி இல்லாமல் போகும்?' என்று பதிலடிதந்தான் முனியன் □

பேராசிரியர் எ. சோதி

# மு. கா. வின் முன் எச்சரிக்கையால் சிக்கலிலே மாட்டிய ஐ.தே.க

(கொழும்பு)

புத்தளம், அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்காங்கிரஸ் தனியாகவும், திகாமடுல்ல, கேகாலை, கொழும்பு மாவட்டங்களில் அது ஐக்கிய தேசியக்கட்சி பட்டியலிலும் போட்டியிடுவதனால் ஐ.தே.க.வின் தலைமை பெரும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டுள்ளது.

புத்தளத்திலும் அம்பாறையிலும் ஐ.தே.க முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தக் கூடாதென்று ஹக்கீம வலியுறுத்தியுள்ளமையால் அங்கே நீண்ட காலம் ஐ.தே.க.எம்பிக்களாகவிருந்த முஸ்லிம்கள் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (உ)

## வெடிப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

தனங்கிளப்பு பகுதியில் கடந்த 23 ஆம் திகதி தேடுதல் நடத்திய படையினர் கிரனைட்டுக்கள் 39, 60 மி. மீ மோட்டார், -20, 81 மி. மீ மோட்டார், பம்-3 ஆகியவற்றை மீட்டுச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

## தென்மராட்சியில் இருந்து படையினர் அனுமதியின்றி விறகு எடுத்துவரத்தடை

[தென்மராட்சி]

தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து பாதுகாப்புப் படையினரின் அனுமதியின்றி விறகு கொண்டு வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தற்போது சைக்கிள்களில் விறகு கொண்டு வருபவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவடைந்துள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் ஆட்கள் இல்லாத காணிகள் மற்றும் வீடுகளில்இருந்து விறகுகள் மற்றும் வீட்டுத் தீராந்தி வகைகள் களவு போவதைத் தடுப்பதற்காகவே இத்தடைவிதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. [உ-77]

## அமீர் மறைவுக்கு அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

தேசமான்ய சேர். ஏ. டபிள்யு எம் அமீர் இறைவனடி சேர்ந்தமையை ஒட்டி 'இடம்பெயர்ந்த வடபகுதி முஸ்லிம்களின் அமைப்பு' அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் அவரது சேவைகள் நினைவு கூரப்பட்டுள்ளன. (உ)

## புனர்வாழ்வு அமைச்சின் புலமைப் பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 118 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு புலமைப் பரிசில்திட்டம் ஒன்றை அமுல்படுத்தவுள்ளது.

இதன் பிரகாரம், யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த சகல பாடசாலைகளிலுமுள்ளமேற்படி தகைமை வாய்ந்த மாணவர்களின் விபரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு கோட்டக் கல்வி அதிகாரிகளால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-19,9)

## பொன்விழா

(யாழ்ப்பாணம்)

ம.டேவிட் தம்பிராஜா அவர்களின் பொன் விழாவும், மலர் வெளியீடும் நவம்பர் ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ் ப.நோ.கூ. சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடகிழக்கு மாகாண சபையின் முன்னை நாள் விளையாட்டுத்துறைப்பணிப்பாளர் எஸ் மரியதாஸின் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் யாழ் பல்கலைக்கழக கல்வியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ)

## ஊனமுற்றோரிடையே பல்வேறு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும டிசம்பர் மாதம் இடம்பெறவுள்ள சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு ஊனமுற்றோரிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சித்திரப்போட்டி, சுயமுயற்சிப்போட்டி, முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி என்பன இடம் பெறவுள்ளன.

போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் எதிர் வரும் மாதம் 15ஆம் திகதிக்கு முன் ஊனமுற்றோர் புனர் வாழ்வுச்சங்க அலுவலகத்தில்விண்ணப்பிக்க முடியுமென சங்க செயலாளர் க.கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (உ-104)

## மடக்கிப் பிடிக்கப்பட்ட திருட்டு நபர்கள் பொலிஸில் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சண்டிலிப்பாய் தொட்டிலடிப்பகுதியில்இடம்பெற்ற கடை உடைப்புச் சம்பவத்துடன் தொர்புடைய திருடர்கள் அப்பகுதி பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்,

நான்கள்ளன், நான் கள்ளன் என்று அவர்கள் கூறியபடி பொருட்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சங்கானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டான்,

## கட்டடம் அமைக்கத்தடை

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி

## ஒருநாள் மின்னல் வேக கூடைப்பந்தாட்டம்

(வல்வெட்டித்துறை)

சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தமாக, சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன், பதிவு செய்யப்பட்ட கூடைப்பந்தாட்டக் கழகங்களுக்கிடையில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால்விலகல் முறையிலான ஒரு நாள் 'மின்னல் வேக' கூடைப் பந்தாட்டம் நடத்தப்படவுள்ளது.

இச்சுற்றுப் போட்டி எதிர் வரும் 31ஆம் திகதி புதன் கிழமை யாழ் இந்துக்கல்லூரியில நடைபெறவுளளது. (செ-217)

கடை உடைப்புச் சம்பவத்துடன் தொர்புடைய திருடர்கள் அப்பகுதி பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு படி பொருட்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சங்கானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டான்,

[உ-104]

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை எல்லைககுட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்தால் அதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளடுக்கப்படுமென பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோண்சன் தெரிவித்துளளார்.

பிரதேச சபை எல்லைக்குள் கடைகளோ அல்லது வீடுகளோ கட்டுவதாயின் பிரதேசசபைவீதிப் பொது வழிச் சட்டத்தின் பிரகாரம் சபையில் பொருத்தமான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப்பூர்த்தி செய்து விண்ணப்பிப்பவர்களுக்கே கட்டடம் அமைக்க அனுமதி வழங்கப்படும்என அவர் கூறியுள்ளார்.

(எ-232)

செய்யப்பட்ட கூடைப்பந்தாட்டக் கழகங்களுக்கிடையில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால்வில வரும் 31ஆம் திகதி புதன்கிழமை யாழ் இந்துக்கல்லூரியில நடைபெறவுள்ளது.

(செ-217)

# மனித கௌரவத்திற்கான மன்ற முயற்சியால் மீண்டும்பணியில் இணைவு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கத்தில் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்டவரான மாதகலைச் சேர்ந்த அ. பரராஜசிங்கம் என்பவர் மனித கௌரவத்திற்கான மன்றத்தில்செய்த முறைப்பாட்டையடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடம் தொடர்பு கொண்டு அவரதுவேலை மீளப்பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் ஐ. சிவராசா தெரிவித்தார்.

(உ)

# பண்ணிசைப் போட்டி பரிசில் வழங்கல்

(துன்னாலை)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலய உற்சவத்தையொட்டி கடந்த மாதம் 24ஆம் திகதி ஆலயத்தின் புதிய வசந்த மண்டபத்தில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்
ஜெ. வைஷ்ணவி யா/மானிப்பாய் ஆங்கில பாடசாலை.

இரண்டாம் இடம்
க.கஸ்தூரி யா/விக்னேஸ்வராக் கல்லூரி.

மூன்றாம் இடம்
பா.தர்மினி யா/வட இந்து மகளிர் கல்லூரி.

சாந்தகுமார் மதுசூதனா யா/வட இந்து மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

முதலாம் இடம்
கோ. சிவராசா யா/கரவெட்டி றோ, க.ஆண்கள் பாடசாலை.

இரண்டாம் இடம்
நா.தர்சிகா யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,

மூன்றாம் இடம்

(06ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிப்பகுதி குடியிருப்புக்களில்

# வெள்ளநீர் தேக்கம் 30றகும் அதிக குடும்பங்கள் ஆலயத்தில் தஞ்சம்

(மானிப்பாய்)

கடந்த சில நாட்களாகப் பெய்த கடும் மழையினால் ஆனைக்கோட்டை முள்ளி ஜே/133 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 30 இற்கும் மேற்பட்ட குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாகமேற்படி மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன் பொதுவிடங்களான ஆலயங்களிலும் பாடசாலைகளிலும்தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, வெள்ளநீரில் மூழ்கி நிற்கும் இவர்களது குடியிருப்புக்கள் பல சேதமடைந்து ,இனிமேல் குடியிருப்புக்கு ஏற்றதல்லாத நிலையை அடையலாம் எனவும்.

தமது கையறு நிலைகுறித்து எந்தவொரு பொது அமைப்போ அன்றி நிறுவனமோ கருத்தில்கொள்ளாதது குறித்தும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

[உ-232]

## சிந்தனைக்கு விருந்து

### "எருமையும் ஆம்" என்றான்

''பண்புப் பெயர்பலவும் மைவிகுதி கொள்ளு'' மெனத்
திண்ணமாய் ஆசிரியர் செப்பியே "உண்மை
கருமை'' முதலெடுத்துக் காட்டுக்கள் தந்தார்
'எருமையும்ஆம்'' என்றான் இவன்

'பழையவன்'

### அமெ. தாக்குதலுடன் தொடர்பு பட்டவர் என்ற

# சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்ட பாகிஸ்தானியர் சிறைச்சாலையில் மரணம்

## ஆதாரத்தை மறைக்கும் செயலென சந்தேகம்

(வாஷிங்டன்)

அமெரிக்க நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் நகரங்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்றும் குடிவரவு சட்டதிட்டங்களை மீறினார் என்றும் குற்றம் சாட்டப்பட்டு, அமெரிக்க நியூஜெசி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முகமட்பட் என்ற இக்கைதி இருதய நோயிலேயே உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை அறிக்கை தெரிவித்த போதும் அவ்வறிக்கையில் எதுவித உண்மையும் இல்லை என்று அமெரிக்க ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மரணமடைந்த கைதி விமானத்தாக்குதலுடன் தொடர்புடையவர் என்பது சந்தேகமின்றி தெரியவந்துள்ளதால் மேற்படி கைதி உயிருடன் இருந்தால் தாக்குதலின் சூத்திரதாரி கண்டுபிடிக்கப்படுவார் என்பதால் சம்பந்தப்பட்ட பயங்கரவாதிகள் வேண்டுமென்றே இவரைக் கொலை செய்திருக்கலாம் என்றும்,

அவரது மரணம் பற்றி தீவிர விசாரணைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா மீது தாக்குதல் புரிந்தவர் ஒஸாமா பின்லேடன் தான் என்று நிரூபிப்பதற்கு அமெரிக்காவிடம் இருந்த ஆதாரங்களில் 'முகமட்பட்' டும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பலஸ்தீனர் ஐவர் பலி

(ஜெருசலேம்)

மத்தியகிழக்கு மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதியில் இஸ்ரேலிய வான் பீரங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்டு நடத்திய தாக்குதலில் 5 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலியரின்இவ்வாறான தாக்குதல்களால் பலஸ்தீனர்கள் பெரும் பாதிப்படைந்து வருவதுடன்பலஸ்தீனப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இஸ்ரேலியர்களை வெளியேற்ற முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

### அந்திரெக்ஸ் பக்ரீறியா கிருமியால்

# பாரதூரமான விளைவு ஏற்படா பீதிக்கு பிடல்கஸ்ரோ முற்றுப்புள்ளி

(ஹவானா)

உலகையே அச்சுறுத்திவரும் அந்திரெக்ஸ் பக்ரீறியா கிருமி சாதாரண தடிமனை மட்டுமே ஏற்படுத்தக்கூடியதென்றும், இதனால்பாரதூரமான விளைவு ஒன்றும் ஏற்படாது என்றும் கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ தெரிவித்துள்ளார்.

கியூபாவின் கிழக்குப் பகுதியான ஸம்யாக்குவில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கஸ்ரோ மேலும் தெரிவிக்கையில், தற்போது அமெரிக்காவை மட்டுமன்றிஉலகையே உலுக்கி வரும் அந்திரெக்ஸ் பற்றிய தகவல் வேண்டுமென்றே பரப்பப்படுவதாகவும் இது ஒரு நாசகாரவேலை என்றும் உண்மையில் இதனைப்பற்றி அமெரிக்கா அலட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் கூறியிருக்கின்றார். (உ-7)

## அந்திரெக்ஸ் பீதி வெறும் கட்டுக் கதையாம்

[புதுடில்லி]

அந்திரெக்ஸ்பிரச்சினையில் மக்கள் பீதியடையத் தேவையில்லை யென்றும் இது வரை பரிசோதிக்கப் பட்டவற்றில் இருந்து எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லையென்றும் இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.பி டாகு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பட்னா செய்தியாளர்களிடம் பேசிய இந்திய சுகாதார அமைச்சர் பவுடர்கள் இருந்த 22 பார்சல்களைத் தேசிய தொற்றுநோய் தடுப்பகத்தில் ஆய்வு செய்த பொழுது ஒன்றில் கூட அந்திரெக்ஸ் நோய்க் கிருமிகள் தென்படவில்லை யென்று தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தில்கால் நடைகள் மூலம் அந்திரெக்ஸ் நோயைக் கட்டுப்படுத்த 21 கிராமங்களில் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்றும்தெரிவித்தார். (து)

## தாய்லாந்தில் வெடிவிபத்து 10பேர் பலி; பலர்காயம்

(பாங்கொங்)

தாய்லாந்தின் ஆயுத தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 10 பேர் பலியானதுடன் 60 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாங்கொங்கில் இருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தொழிற்சாலையில் இடம்பெற்ற இவ்வெடிவிபத்துகாரணமாக தொழிற்சாலையிலிருந்து 7 கிலோ மீற்றர் சூழலில் அமைந்துள்ள கட்டடங்கள் அதிர்ந்துள்ளதுடன் கட்டட ஜன்னல்கள் பலதும் சேதத்திற்குள்ளாகியுள்ளதாக தெரியவருகிறது. [உ-7)

## குடியிருப்புகளில் தலிபான்கள் தஞ்சம்

(காபூல்)

அமெரிக்கா, தலிபான்நிலைகள் மீது கடும் தாக்குதல் நடத்துவதனால்தலிபான்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் தஞ்சம் அடைவதாக செய்திகள்வெளியாகிஉள்ளன.

இதனால் அமெரிக்க தாக்குதலினால் பெருமளவு மக்கள் கொல்லப்படும்அபாயம் ஏற்பட்டுள்ளது. (உ-21)

## சுரங்கப் பாதையில் லொறி விபத்து

(சூரிச்)

சுவிற்சர்லாந்தின் தென்பாகத்தில் உள்ள சுரங்கப் பாதை ஒன்றில் இரு லொறிகள் ஒன்றுடனொன்று மோதியதையடுத்து சுரங்கப்பாதையினுள் பெரும் தீ அனர்த்தம் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதனால் சூரிச்சையும் வடகெட்ருண்டியையும் இணைக்கும் போபால்ற் சுரங்கப்பாதையில் இருந்து பெரும் புகை மூட்டம் எழுந்துள்ளதால் மீட்புப் பணியாளர் உட்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நேரிற் சென்று நிலைமைகளை அவதானிக்க முடியாமையால் விபத்தில்அகப்பட்ட இரு லொறிகளையும் தவிர வேறு வாகனங்கள் பலவும் சுரங்கப்பாதையினுள் அகப்பட்டிருக்கலாம், எனவும் பெருமதொகையினர் உயிரிழந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. (உ-2)ப்

## இலங்கைத் தமிழர் 14 பேர் தமிழ்நாடு போய்ச் சேர்ந்தனர்

(தனுஷ்கோடி)

இலங்கையைச் சேர்ந்த14 தமிழர்கள் தமிழ்நாடுவந்து சேர்ந்துள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த 8குடும்பங்களைச்சேர்ந்த மேற்படி 14 பேர் தனுஷ்கோடி கடற்கரையில் வந்து இறங்கியதை அடுத்து விசாரணைக்குப் பின்பு மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்களில் 7ஆண்களும்,5 பெண்களும் 2குழந்தைகளும் அடங்குவர். (து)

## கொழும்பு குண்டு வெடிப்பு கணவன் மனைவி உட்பட நால்வர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக கணவன் மனைவி உட்பட நான்கு பேரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மட்டக்களப்பில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு ஜயந்திபுரத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் (வயது54) மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த தொலைத்தொடர்பு உரிமையாளர் சாந்தினி மகேந்திரன் (வயது 24), வலையம்பன் மயில்வாகனம், யுவராஜ் கோடிஸ்வரராஜா (வயது24) ஆகியோரே கைது செய்யப் பட்டவர்களாவர்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும்நான்கு பேர் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் இருவர் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (ந-4)

## கண்ணிசைப்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

ந சஞ்ஜீவன் யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

இவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கல் நாளை மு.ப 10.00 மணிக்கு ஆலய புதிய வசந்தமண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-41)

# இறைவனின் இடப்பாகம் பெறுவதற்கென்று உமையவள் நோற்ற கேதாரகௌரி விரதம்

நவராத்திரி முடிவில் ஆரம்பமாகும் கேதாரகௌரி நோன்பு.

சுடரில் சூடு போலவும் மலரில் மணம் போலவும் இறைவனுடன் ஒன்றாகி இயங்குபவள் அன்னை உமையவள். இவ்வரிய நிலையினை அடைய உமையம்மை புரிந்த விரதம் கேதாரகௌரி விரதம். முன்னைய பிறவிகளிலே தட்சன் மகளாகவும், மலையரசன் மகளாகவும் தோன்றிய உமையம்மை தவம்பல புரிந்து இறைவனை அடைந்தாள். ஆண், பெண் என வேறுபாடில்லாது இரண்டும் ஒரே உருவில் கொண்டகோலம் அர்த்தநாரீஸ்வர வடிவம். அதனாலே அரனாரின் இடது காதிலே தோடு அமைந்து ''தோடுடைய செவியன்'' எனப் பாடல் பெற்றார் சிவபெருமான்.

### பிருங்கி முனிவர்

பிருங்கி முனிவர் இறைவியை விடுத்து இறைவனை மட்டும் வழிபடும் முறையைக் கைக்கொண்டிருந்தார். தன்னையன்றி இறைவனுக்குத் தனியாகச் சக்தியெதுவும் இல்லையென வாழ்ந்த உமாதேவி பிருங்கி முனிவர் வழிபாட்டால் சினமடைந்தாள். அவரின் வழிபாட்டைப் பொய்யாக்கி தானும் இறைவரும் ஒன்றே என ஆகும் வண்ணம் உமை இறைவரிடம் வரம் கேட்டாள். அதற்காக ஈய்ங்கொல்லி மலையிலே கேதாரகௌரி விரதத்தை அனுஷ்டித்து இடப்பாகத்தை பெற்றுக் கொண்டாள். இதனால் பிருங்கி முனிவரின் செருக்கு அடங்கியது.

### புராணப் புதிர்

சைவசமய மக்களுக்கு புராணங்களும், இதிகாசங்களும், உபகதைகளும் புகட்டும் பாடங்கள் பற்பல. அவற்றில் சில புரியாத புதிர்களாக அமைந்து அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவதும் உண்டு. அவ்வாறே கேதாரகௌரி விரதம் மூலம் இறைவி பெற்ற வரமும் அமைந்துள்ளது. தெய்வம் ஒன்றே அதுவே பலவேறுஉருவங்களையும், பெயர்களையும் கொண்டு பலவேறு செயற்பாடுகளைச் செய்கிறது. அன்னை தந்தையாக அழகுமிக்க பிள்ளையாக குமரனாக பலவேறு வடிவங்களில் நாம் இறைவனை வழிபடுகின்றோம். இறுதியில் அன்னையும் தந்தையும் ஒருருவமாகி நிற்கும் அர்த்தநாரீஸ்வர வடிவிலும் இறைவனைக் காணுகிறோம்.

இவற்றைக் கதைகளாகக் கேட்டுக் கற்பனைகளென விட்டுவிடாது கருத்துணர்ந்து இறைவனை வழிபடல் வேண்டும். தன்னை நீக்கி இறைவனுக்கு ஒரு உருவம் இருப்பது உமையம்மைக்குப் பொறுக்கவில்லை. அதனால் அவள் இடப்பாகத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டாள். அது உண்மையான அன்பையே குறிக்கும். □

**சி. ஜெயகணேஷன்**
ஆசிரியர்

## மட்டக்களப்பில் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் வரதர் அணி மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாகப்போட்டியிடவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரத்தினம் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். (உ-5)

ஆற்றாரும் ஆற்றி அடுப
இடனறிந்து
போற்றார் கண் போற்றிச்
செயின்

குறள்

# வலம்புரி

## சாத்தானுக்கும் வாக்குண்டு!

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக யாழ். மாவட்டத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்வது சூடு பிடித்துள்ளது. அரசியல் கட்சிகள் தேவையானவர்களை திரட்டிக் கொண்டு தேர்தல் களம் புகுவதற்கு ஆயத்தமாகி விட்டனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்வது சூடுபிடித்துள்ளதால் வேட்பாளர்கள் மீது சூடு பிடிக்காமல் தடுக்கும் பணியில் பாதுகாப்புப் படையினர் யாழ் செயலகத்தைச் சுற்றி வியூகம் அமைத்துள்ளனர். யாழ். செயலகத்தில்பணிபுரிவோருக்கு இக்காலத்தில்இராஜ மரியாதை, சுற்றிவரப் படையினர் காவல்செய்ய கடமை நடக்கிறது.

வேட்பாளர்களுக்குசெயலகத்துடன் மட்டும் பாதுகாப்பு முடிந்துவிடுவதில்லை. தேர்தல் முடியும் வரை அனேகருக்குப் பாதுகாப்பு தேவை. தேர்தல் முடிந்த பின்பு வெற்றி பெற்றவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கினால்போதுமானதாகும். எதுவாயினும் நேற்றுவரை வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களைப் பற்றிப் பொதுமக்களுக்கு எதுவுமே தெரியாது. மக்கள் மத்தியில் யார்? எவர்? என்று தெரியாதவர்களே வேட்பாளர்களாக நிறுத்தப்படுகிறார்களென்றால் யாழ்ப்பாணத் தமிழர்களின் நிலை என்னவாயிற்று என்பதை உணர முடிகிறது.

அதுமட்டுமன்றி தென்னிலங்கையில் இனத்துவேஷத்தை ஆலகால விஷம் போல் கக்கும் ஜே. வி. பியும் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. புலிகளுடன் பேசுவதை -இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை -தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதை எதிர்க்கும்ஜே.வி.பியும் யாழ்ப்பாணத்தில் வேட்புமனுத்தாக்கல்செய்துள்ளதெனில் அவர்களுக்கும் வாக்குகள் கிடைக்கவுள்ளதெனில் சாத்தான் நேரில் வந்து யாழ் செயலகத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்து தேர்தலில் போட்டியிட்டால் அதற்கும் வாக்களிப்பதற்குவாக்காளர்கள் இருக்கும்வரை தென்னிலங்கையில் இனவாதம் பேசும் ஜே.வி.பி சிஹல உறுமய என்பன யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடவே செய்யும்.

---

## திறனாய்வுக் களம்

# பண்பாட்டு விழுமியங்களைத் தொட்டு நிற்கும்

# "கலைஞானியும் கலைத்தொண்டும்" எனும் நூல்

நூல்: கலைஞானியும் கலைத்தொண்டும்.
ஆசிரியர்: எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி
வெளியீடு; மாமனிதர் கலைஞானி
கலாலயம் குரும்பசிட்டி.
விலை: ரூபா 100/-

மண்ணிலே வந்த பிறவியே எமக்கு வாலிதாம் இன்பம் பயக்கும் என்பதனைஒருதனி மனிதனாக நின்று, தமிழர் தம் வரலாற்றுக் கலைப் பொக்கிஷங்களை எல்லாம் பொறுமையோடு தேடிக் கண்டு கொண்ட, செந்தண்மை பூண்டொழுகும்அற்புத ஞானியே கலைஞானி அ. செல்வரத்தினம் எனும் கண்ணாடி மாமனிதர்கலைப் பெட்டகமாய்க் காலமெலாம் பயன்படுமாறு, சொல்லவல்ல ஒரு அதீத சிந்தனையாளனை அறிவுசார்ந்த உலகம் நன்கு தெரிந்திருந்தும், தக்கதோர் சந்தர்ப்பம் அளிக்காதவேளையில், காலமறிந்து, கோலமறிந்து, அம்மாமனிதரின்உட்கிடக்கைகளைவெளிக்கொணரப் படைக்கப் பட்ட ஒரு சிறந்த ஆவணமே, ஷாந்தன் சத்திய கீர்த்தியின் இந்நூலாகும்.

### முகப்பு அட்டை

காத்திரமானதும், கலைஞானியிடம் மருவிய கலையம்சங்களும் நிறைந்தமுகப்புஅட்டையானது பார்ப்பவர்களையும், படிப்பவர்களையும், பலகணங்கள் சிந்திக்க வைக்கிறது. இற்றை வரை வெளிவந்த நூல்களில் அமைகின்ற, முகப்பு அட்டையிலுமிழ்கின்ற கற்பனையை விட, மேலுமொருபடி வித்தியாசமான கண்ணோட்டத்தில், குறிப்பாகச்சர்வதேச தரத்தில் ஆக்கப்பட்டிருப்பது வரவேற்கப்படக் கூடியதொன்றாகும்.

### பொற்பதக்கங்களுக் குரியவர்கள்

குரும்பசிட்டி தந்த தவப்புதல்வனின் வியாபக எண்ணங்களையும், விலைமதிப்பற்ற கருவூலங்களையும் வரலாற்றாய்வாளர்களுக்குமட்டுமன்றி பல்கலைக் கழக மாணவர்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும்பொருத்தமாகத் தொகுத்திட வழியமைத்த, 'மாமனிதர் கலைஞானிகலாலயப் பங்காளிகள அனைவரும்' பொற் பதக்கங்களுக்குரியவர்களேயாவர்.

தொல்லியல்சார்ந்ததேடல்களை ஆவணப்படுத்தவல்ல ஒரு சமுதாயம் நம்நாட்டிற்கு அவசியம் தேவை என்பதற்கு ஒரு உதாரண சீலராக விளங்கும் எம். ஷாந்தன் சத்திய கீர்த்தி பத்திரிகைகளில்வெளிவந்த கலைஞானியின் நறுக்குகளைத் தொகுத்து, சாந்தி அச்சகத்தில் நூலாக்கி வெளியிட்டிருப்பது உண்மையிலே போற்றுதற்குரிய தொன்றாகும். நவீனயுகம் மனிதகுலத்தினை வேகமாக்கி விட்டது. தாய், தந்தை, பிள்ளைகளிடையே இறுக்கமான தொடர்புகளுக்கான நேரங்கள் சரிவர அமைவதில்லை. ஒரு மாணவன் கதிரையில்உட்கார்ந்து ஒருமணித்தியாலம் கற்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றான். நல்ல நண்பர்களைக் கண்டுபிடிப்பதேகடினமாகஉள்ளது. இந்தச் சூழ்நிலையில், கலைப்பணிக்கென பிரமச்சாரியாகத் தன்னை அர்ப்பணித்த கலைஞானியை இப்போதாவது முழுமையாக இனங்கண்டிருப்பது ஓரளவு திருப்தியைத் தருகிறது.

ஐம்பது வருடங்களாகப் பேணிப் பாதுகாத்தநிலையில் நமது சந்ததியினர் காப்பாற்றத் தவறும் பட்சத்தில், அதற்குரிய பரிசினையும் நாம்தான் பொறுப்பேற்க வேண்டிய காலம் நெருங்கிய வண்ணமுள்ளதையும் சிந்திப்பது இத்தருணத்தில் பொருத்தமானதே.

### தலை குனிவு

'தமிழர் பூர்வீகத்தை தமிழர் மறந்து விடக்கூடாது' எனும் தலைப்பில் மோசஸ் ஷாந்தன் சத்தியகீர்த்தியால் காணப்பட்ட நேர்காணலில் கலைஞானியின் ஆதங்கம் பீறிட்டிருந்தது. ஆம்......

## கே. எஸ். சிவஞானராஜா

ஆசிரியர்

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

### இலட்சிய மனிதன்

நூலின்வாசலை, பெரியார்களின் வாசகங்கள் அலங்கரிக்கின்றன. உள்ளே இருபத்திரண்டு விடயதானங்கள் கலைஞானியை ஒரு இலட்சிய மனிதனாக உயர்த்திவிடுகின்றன. 'வெளிநாட்டவர்கள், 60500 ஸ்ரேளிங் பவுண் கேட்டபோதும், தேடற்கரிய நாணயங்கள், சுவடிகள், கற்சிலைகள், ஆயுர் வேத மூலிகைக் குறிப்புகள, தமிழர்தம்எச்சங்கள் பற்றும் தொல்லியல் கருவூலங்கள் யாவற்றையும் கையளிக்காது, எமதுசந்ததிக்காகப் பயன்பட வேண்டுமே தவிர, அவை எமதுமண்ணை விட்டுவெளியே சென்றுவிடக் கூடாது' என்று தூரநோக்கோடு மொழிந்த வார்த்தையை எமது மண் எவ்வளவு தூரம்காப்பாற்றமுனைகிறது என்பதனைக் கலைஞானி ஜீவிக்கும் போதே நிரூபிக்க ஆவனபுரிந்திடல் அவசியம். தனிமனிதனின் பிரயாசையினால் சேகரிக்கப்பட்ட தமிழர்தம் பூர்வீகசொத்துக்களை 'என்னை வருத்தி அலைந்து, திரிந்து ஒவ்வொன்றாகச் சேகரித்த பலஅரிய கலைப்பொக்கிஷங்களின் பெறுமதியையும், நன்மைகளையும்இங்குள்ளவர்கள் எவரும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. எல்லாமேபேச்சோடும்எழுத்தோடும் தான்.

இக் கருத்துப் பற்றிகற்றவர்கள் அலட்சியம் செய்துவிடலாகாது. எல்லோரும்பட்டம் பதவி, அடுத்த கதிரைக்குத் தயாராகிக் கொள்கின்றனர். சிலவேளைகளில் இரண்டாயிரத்து ஐம்பதாம் ஆண்டிலே ஒரு'டாக்டர்'பட்டம்வழங்கி வரலாற்று நூல்களில் கலைஞானியின் வரலாறு பிரசுரிக்கப்படலாம் அல்லாவிடின் வெளிநாடு ஒன்று அவரைக் கௌரவிக்க முன்வரலாம். அதன்பின்னர் நாம் வெட்கப்பட வேண்டியவர்களாகத் தலை குனியலாம். இதில் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் கூட கலைஞானியின் சேவைகளை முன்னெடுக்கஇறைவன் கருணை தரவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

'தனிமனித முயற்சியில் உருவான தொல் பொருட் காப்பகம்' எனும் வாயில்வழியாக,ம.வ. கானமயில்நாதன் குறிப்பிடும் ஒரு சத்துள்ள வசனம் இங்கு நோக்கத்தக்கது.

'வேறுஎவரும்சிந்திக்காத ஒரு தொண்டை முன்னெடுத்துள்ள இந்த இளைஞனின் தொண்டுக்குக் கலைப்பற்றுள்ள அனைவரும் கை கொடுத்துதவ வேண்டும்' என்பதே அதுவாகும்.

### ஆறுதல் சொல்பவர் யார்?

முன்னாள் யாழ் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு, 'கலைஞானி சேகரித்ததைத் தமிழரல்ல கறையான்களே உண்டு மகிழ்கின்றன'

கூட்டத்தில் கூடிநின்றுகூடிப் பிதற்றும் வாய்ச் சொல்லில் வீரர்களாகி விட்டோமா? கலைஞானிக்குஆறுதல்சொல்வார் யார்? என்று குறிப்பிடுகிறார்.

வருங்காலச் சந்ததி செய்துள்ள தவமே கலைஞானியின் செயலுக்குக் காரணம்' என சூரியகாந்திஆசிரிய 'சாமிஜி'யும்,

'அடுத்த சந்ததிக்காய் அர்ப்பணிக்கப்பட்டவாழ்வு' எனும் நிருத்தன் வழங்கிய கூற்று வாயிலாக கந்தரோடையில் காணப்படும் சான்றுகள் வீரசைவ வழிபாட்டுக்குரியவை எனக் கலைஞானி கூறியவாசகங்கள் வலிமைதரக் கூடியவை.

'கறையானும், தத்துவெட்டியும், எலியும் தான் எனக்கு உறுதுணையாகின்றன' எனக் குரலிட்ட செய்தியை ஈழநாதம் 1991 இல் வெளியிட்டது.

### கலைஞானியின் தேடல்கள்

1974 இல் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டின் போதும் 1991இல்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரும்பொருள் கண்காட்சியின்போதும் 'கலைஞானி'யின்தேடல்கள் கற்றோரால் இனங் காணப்பட்டதை 'யாழ் பல்கலைக்கழகமும் இந்துமன்றமும் 'என்றகட்டுரைத்தொகுப்பு தெளிவாக்கியுள்ளமைகாலத் தோடிசைந்த செயலாகும்.

வரலாற்றுச் சான்றுகாட்டி நிற்கும் அரும் பொருள் கண்காட்சி' எனக் குறிப்பிடும் உமா 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ' எனக் கசிந்து கவரப்படுகின்றார்.

பேராசிரியர்சிவசாமி 'கலைஞானியின் கலைச் செல்வங்கள் எவ்வகையிலும்பாதிக்கப் படாது ஒரு கேந்திர நிலையத்தில் நன்கு பேணப்பட வேண்டியவை' என ஆவலுற்றிருக்கின்றார்.

'ஒரு அமரசாதனை' எனக் கலைஞானியின் உவமையிலாத் தொண்டினை ஆசிரியர் க. சிவராமலிங்கம் கூறியுள்ளவை ஈண்டு கருதத்தக்கதாகும்.

### காட்சியகம் அவசியம்

மாற்றம் சஞ்சிகை1992இல் குறிப்பாகக் கோடிட்டசிலவரிகள...

'... நான் நாடோடியாக அலைகிறேன். எழுந்து நடக்கவே உதவி தேவையாக உள்ளது. மூன்று லொறிகளில் கொள்ளக் கூடிய அரும் பொருட்களைத் தூக்கிச் செல்வது இலகுவான காரியமல்ல இவற்றைப் பராமரிப்பதற்குஎன்னிடம்பணமில்லை. இந்நிலையில் ஒருதனி மனிதனால் இதற்கென ஒரு தனியான காட்சியகம் எப்படி அமைப்பது...' ஆம் இந்த நொந்து போன வரிகளுக்கு யார் பதில் சொல்லப்போகின்றார்கள்?

இந்நூலின் 33 ஆம் பக்கத்தில் தெளிவாக இடம் பெறும் 'கலைஞானி அறக்கட்டளையே' விடை!

காலைக் கதிரில்கலைஞானி கூறுவது போல 'இந்த முயற்சியை ஏன் எடுத்தேன்' எனக் காலமும்கருதுகின்றதோ? அல்லது கவலைப்படப் போகி

(02ம் பக்கம் பார்க்க)

---

## தினசரி தியானம்

## கிரியை

இது பணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்
அது பணி செய்கின்றவளொரு கூறன்
இது பணி மானுடர் செய்பணி ஈசன்
பதிபணி செய்வது பத்திமைகாணே!

– திருமந்திரம்

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களால் தேவே, உனக்கென்றே நான் செயல் புரிவேனாக.

வயது வரும் பொழுது ஒவ்வொரு மனிதனும் வினையாற்றத் தகுதியுடையவன் ஆகிறான். அவன் புரியும் கருமம் தனக்கு மட்டுமல்லாது உலகுக்கும் நன்கு பயன் படவேண்டும். அத்தகைய கருமத்தைக் கடவுளுக் கென்றே செய்வது கிரியை ஆகிறது.

–ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# மிதிவெடிகள் அகற்றப்படாத பகுதிக்கு மக்கள் செல்வதைத்தவிர்க்க வேண்டும்

## பாதுகாப்பு தலைமையகம் வேண்டுகோள்

(பலாலி)

தென்மராட்சிப் பகுதியில் எல்ரீரீஈஇயக்கத்தால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுவதில் பாதுகாப்பு படையினர் இரவு பகல் பாராது பெரும் முயற்சியுடன் அகற்றி அப் பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்தி வருகின்றனர் ஆனாலும் தென்மராட்சிப் பகுதியில் மிதி வெடிகள் அகற்றப்படாத பகுதிகள் இருப்பதால் அந்தப் பகுதியைஅடையாளமிட்டுஅப் பகுதியில் காணப்படும் மிதிவெடிகளை அகற்றிடும் நடவடிக்கையில் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மிதிவெடிகள் அகற்றப்பட்டு மீளக் குடியமர்ந்துள்ளவர்களும், ஏனைய பகுதியில் இருந்து தென்மராட்சிப் பகுதிக்கு வரும் சில நபர்களும் தமது குறுகிய இலாபத்தை கருதி மிதிவெடி அகற்றாத பகுதியில் அமைந்துள்ள மற்றவர்களின் இடங்களுக்கு செல்வதால் கை, கால்களை இழந்து உயிரிழக்க வேண்டியுள்ளனர்;

இதனால் பாதுகாப்புப் படையினரால் அடையாளமிட்டு மிதிவெடிகள் இருப்பதாக கூறப்படும் ஜே/303 சாவகச்சேரி (வடக்கு) ஜே/304 மந்துவில் ஜே/305 கல்வயல், ஜே/306 நுணாவில் (கிழக்கு), ஜே/308 நுணாவில் (மேற்கு), ஜே/313 மட்டுவில் (வடக்கு), ஜே/316 சரசாலை (தெற்கு) ஜே/317 சரசாலை (வடக்கு) ஆகியஇடங்களுக்கு மிதிவெடிகள் அகற்றப்படும் வரைமக்களைஉட்பிரவேசிக்க வேண்டாமென கேட்கப்பட்டுள்ளது. (ந)

# ஈ.பி.ஆர்.எல்.எவ் [வரதர் அணி], புதிய இடதுசாரி முன்னணி

## நேற்று வேட்புமனு தாக்கல்

[யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர்மாதம் 5ம் திகதி நடைபெற வுள்ள பொதுத் தேர்தலுக்கு யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஈ.பி.ஆர்.எல். எவ். வரதர்அணியும் புதிய இடதுசாரி முன்னணியும் நேற்று பிற்பகல் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன;

ஈ,பி.ஆர்.எல்,எவ் வரதர் அணி சார்பாக த. சுபத்திரன்[தலைமை வேட்பாளர்] க. சிவராசா, வை, விக்கினேஸ்வரன், செ. சுந்தரமூர்த்தி. சே. மெற்றலின், பா ஜெயக்குமார், மு. மனோரஞ்சன், ம. மங்களநேசன், வ. சுந்தரம். தி. தங்கராசா, சு. மார்க்கண்டு, அ. ஜோன், ஆகியோரும்,

புதிய இடதுசாரி முன்னணி சார்பாக து. திருமாறன் [தலைமை வேட்பாளர்] அ-ஜெசுதர்சன், தி.ராஜதேவி, க. சிறில், ஜே. செல்வராசா செ. ஜோச், றா, பாத்திமா, க. சின்னத்துரை, க. கணேஸ்வரன், இ. இராஜேந்திரன், கு. உதயகுமார், த. நடராசா ஆகியோர் யாழ் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர் [ந-4-45]

### நாகர்கோவிலில்

## எறிகணைத் தாக்குதல்

[திருநெல்வேலி]

நாகர் கோவில் கடற்கரை இராணுவமுகாமை அண்டிய பகுதிகளில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில்படையினரும் விடுதலைப்புலிகளும் பரஸ்பரம் குறுந்தூர எறிகணைத்தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இத்தாக்குதலினால் உண்டான சேதவிபரங்கள் எவையும் இதுவரை தெரியவரவில்லை; [உ-43]

### வேட்புமனு

அவ்வளவுதான் இராஜ மரியாதையுடன் அவரை வேட்புமனுத்தாக்கல் செய்யும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர் கையில் 2500 ரூபாவுடன் தனித்து வேட்பு மனுத்தாக்கல் செய்ய வந்தவரின் நிலையைப் புரிந்து கொண்ட யாழ் தேர்தல்பொறுப்பதிகாரி தேர்தல் விதி - வேட்பாளர் நியமனம் ஆகியவற்றை விளக்கிக் கூறி அனுப்பிவைத்தார்.

2500 ரூபாவுடன் வேட்புமனுத்தாக்கல் செய்யச் சென்றவர் கைதடியில் இருந்து இடம் பெயர்ந்தவரென பின்னர் தெரியவந்தது. (ந)

### மூதூர்

ஆனைச்சேனைப் பகுதியில் செல் ஒன்று வீழ்ந்துவெடித்ததில் 11வயதுசிறுவன் ஒருவன் பலியானதுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர் காயமடைந்தவர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப் பட்டுள்ளார் இதனையடுத்து அப்பகுதி முழுவதும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது (ந 4-5)

### மக்களுக்கு

மைப்புக்களை ஏற்படுத்துவது எமது கட்சியின் திட்டமாகும் இந்தத் திட்டத்திற்கமைவாக ஜனாதிபதியினதும், அரசாங்கத்தினதும் அனுசரணையுடன் வீடுகள் கட்டப்பட்டன. இதற்கான பொறுப்பு வவுனியா அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டிருந்தது, அவர் ஒரு சிறந்த நிர்வாகியென அறியப் பட்டிருந்ததாலும் பொறுப்பை அவர் செவ்வனே நிறைவேற்றக் கூடியவர் என்பதாலும் இப்பணி அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது:

எனினும் இவ்வீடமைப்புத்திட்டம் செவ்வனே இடம் பெறவில்லைஎன்பதை அறிந்து கவலை அடைகின்றேன். இந்த வீடமைப்புக்களின் பேரால் ஒருஏமாற்றுவேலைநடந்திருப்பதை உணர்கிறேன். இந்தத் தவறுக்கான காரணத்தை பிறரிடம் சுமத்திவிட்டு நான் தப்பிக்க விரும்பவில்லை; இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் தவறுகளைச் சீர் செய்வதற்கான பரிகாரம் காணும்படி பணிப்புரை விடுத்துள்ளேன் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடக்கின் அபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் உட்பட இத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட சகல திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தனர். (கு)

### சு. வை.

மாற்றம் ரத்துச் செய்யப்பட்டு மீண்டும் யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமை யாற்றுமாறு உத்தர விட்டுள்ளதாக ஆளுநர் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன:

இதே வேளை ஆளுநரின் கடிதம் டாக்டர் தெய்வேந்திரனுக்கு நேற்றுக் கிடைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது: (கு)

### யாழ. நகருக்குள

பாக இறக்கப்பட்டு அவர்களது உடைமைகள், அவர்கள் கொண்டுவரும் பைகள் மற்றும் பொருட்கள்கடுமையான சோதனைக் குட்படுத்தப் பட்டுவருகின்றன.

இராணுவத்தினரின் இப் பாதுகாப்பு நடவடிக்கையால் தீவுப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது;

யாழ்குடாவின் கரையோரப்பகுதிகளில் முட்கம்பிவேலிகளும் மண்மூடைகள்அடுக்கப்பட்டகாப்பரண்களும்காணப் படுகின்றன.

கடற்கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விமானப்படைக்குச் சொந்தமான எம் ஐ17ரக உலங்குவானூர்திகள் கடந்தசிலநாட்களாக ரோந்துநடவடிக்கைகளில்ஈடுபட்டிருந்தமைதெரிந்தது.

யாழ்நகருக்குள் புலிகள் ஊடுருவியிருக்கலாமென்ற அச்சம் காரணமாகவே பொலிசாரும், இராணுவத்தினரும் குடாநாட்டின் பலபாகங்களிலும் தேடுதல்கள், சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளதாக பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்;

இதேவேளை எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கானவேட்புமனுத்தாக்கல் செய்யும்பணி இன்று நண்பகல் 12மணியுடன் முடிவடையவிருப்பதால் இதுவரை வேட்புமனுத்தாக்கல் செய்யாத வேட்பாளர்கள் அனைவரும் இன்று தத்தம் வேட்புமனுக்களைத்தாக்கல் செய்யவுளளனர்.

இந்நிலையில் யாழ் செயலகமும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுற்றி வளைப்புக்களும் தேடுதல் நடவடிக்கைகளும்

# நான்கு தமிழ்க்கட்சிகளின் கொழும்பு மாவட்ட வேட்புமனு இன்று தாக்கலாகும்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புரெலோ அமைப்பைச் சேர்ந்த செ. பதிமநாதன் தலைமையில் 24 பேர் அடங்கிய வேட்புமனுவை இன்று காலை 8 மணிக்கு தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு சார்பாக சட்டத்தரணிகள் க. மு தில்லைநாதன் ரகுராஜ், வேலணை வேணியன் பிரபல வர்த்தகர் மு. வரதராஜா, உட்பட 24 பேர் இப்படடியலில் இடம் பெற்றுள்ளனர்;

இந்த வேட்பு மனுவை நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வி. ஆர். வடிவேற்கரசன் யாழ் மாநகர சபை உறுப்பினர் அரவிந்தன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் ஆகியோர் இன்று காலை தாக்கல் செய்துள்ளனர்.

மனோகணேசன் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் இடம் பெற்றிருப்பதால் தமிழ்க்கட்சி கூட்டமைப்புப் பட்டியலில் இடம் பெறவில்லை என குமரகுருபரன் தெரிவித்துள்ளார். (வ)

# வன்னியில் வேட்புமனு தாக்கல்

(வவுனியா)

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பும், ஈ பி ஆர்.எல்.எவ் (வரதர் அணி) யும் தத்தம் வேட்பு மனுக்களை நேற்று வவுனியா செயலகத்தில் தாக்கல் செய்துள்ளன.

வன்னி மாவட்டத்தில் நான்கு தமிழ்க் கட்சிகளின் சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ரெலோவின் முன்னாள் எம். பி செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

வேட்பாளர் பட்டியலில் ச. குலதேவராஜா, இ. குகனேஸ்வரன், ந.சிவசக்தி, க. ஐயம்பிள்ளை, ஆ. செந்தில்நாதன், காஷ்மீர், டிணிமா, க.பெரியண்ணன், கு.நோகராதலிங்கம், ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர் வன்னியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்திற்குச் சென்ற செல்வம் அடைக்கலநாதன் அங்கு உதயசூரியன்கொடியை ஏற்றி வைத்தார்.

சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் ஈ பி.ஆர்.எல். எவ் வரதர்அணியில் ச. ஞானதாஸ் தலைமையில் செ. திசைவீரசிங்கம், ஆதம் ரகமதுல்லா ஆ.மயூரதன், இ.முருகேஸ்வரன், ப.சிவகுமார், சு.பு.சுபமூர்த்தி, த. மனோரஞ்சன், சி.தயாபரன் ஆகியோரின் பெயர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. [வ]

# நவசமாஜக்கட்சி நேற்று வேட்புமனு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நவசமாஜக்கட்சி நேற்றுத்தாக்கல் செய்துள்ளது;

வேட்புமனுப்பட்டியலில் ரி.திருமாறன், ஏ. ஜேசுநேசன் திருமதிமா .திருநாவுக்கரசு ஜி சிறில், ஜே.செல்வராசா எஸ் குரூஸ, எவ். ராஜசேகரன், கே.செல்லத்துரை, கே.கணேஸ்வரன், ஆர்.ராஜேந்திரன், பி.உதயகுமார். சி நடராசா ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. (ந)

### அமைச்சர் டக்ளஸுடனான சந்திப்பில்

# வவு.பாஸ் நடைமுறையை நீக்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் தற்போது நடைமுறையில் உள்ள பாஸ் நடைமுறையை நீக்குமாறு வவுனியா மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மக்களின் இந்தவேண்டுகோளை அடுத்து டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடனும், பாதுகாப்புச்சபைக் குழுவிடமும்முறைப்பாடுசெய்துளளார்.

கடந்த ஆறுதினங்களாக வவுனியாவில் தங்கியுள்ள அமைச்சர் டக்ளஸ் அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார். (வ)

# கட்சி தாவினார்

(கொழும்பு)

ஊவா மாணக நிதிஅமைச்சர் சமரவீர வன்னி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலிருந்து விலகி ஐக்கியதேசியக் கட்சியில் நேற்று இணைந்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவுடனான கருத்து முரண் பாட்டின் உச்சக் கட்டமாகவே கட்சித்தாவல் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

### தேசியப்பட்டியலில்

4.30 மணிக்கு தேர்தல் ஆணையாளரிடம் வீ. ஆர். வடிவேற்கரசன். ந. குமரகுருபரன் அரவிந்தன் ஆகியோரால் சமர்ப்பிக்கப் பட்டது. (வ)

தீவிரமடைந்திருந்த போதும் எவரும் கைது செய்யப்படவில்லை; (வ)

# ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான யூன், யூலை, ஒகஸ்ற் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் கோப்பாய் பிரதேச சபை அலுவலகத்தில் மேற்படி சபைத் தலைவர் பூ. குணசிங்கத்தால் வழங்கப்பட்டன; (எ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஒக்ரோபர் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;